அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 17/92

கோப்பு இல. 1/543ஈ/814ட

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் – கொழும்பு. 7
1992, மார்ச்சு மாதம் 24 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசாங்க உடைமையாக்கப்பட்ட தொழில் பொறுப்பேற்புகள், கம்பனிகளின் தலைவர்கள்/ தகுதிவாய்ந்த அதிகாரிகள் அனைவருக்கும்.

அரசாங்கத்துறையில் வேலை வாய்ப்பைப் பாதிக்கும் பொது விதிகளுக்கு விதிவிலக்குகள் – பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்.

1991 ஒற்றோபர் 24ஆந் தேதியிட்ட 49/91ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையானது இச்சுற்றறிக்கையினால் பதிலீடு செய்யப்படுகின்றது.

02. பின்வரும் நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் செயற்படுகின்ற பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் தொழிலற்ற உறுப்பினர் ஒருவருக்கு பின்வரும் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய உறுப்பினர் ஒருவர் அரசாங்க சேவைக்கும் மாகாண அரசாங்க சேவைக்கும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கும் பங்குமூலதனத்தின் 51% அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க சேவை நிறுவனங்களினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அரசாங்க உடைமையாக்கப்பட்ட தொழில் பொறுப்பேற்புகளுக்கும் கம்பனிகளுக்கும் ஆளணியைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் பரீட்சையொன்றுக்குத் தோற்றினால் பின்வரும் சலுகைகள் அவருக்கு வழங்கப்படல் வேண்டும்.

| | | சலுகை |
|---|---|---|
| (i) | தந்தை அல்லது தாய் கொல்லப்பட்டிருந்தால் | 25% |
| (ii) | கணவன் அல்லது மனைவி கொல்லப்பட்டிருந்தால் | 25% |
| (iii) | குடும்பத்திற்கு ஆதரவளித்த சகோதரர் அல்லது சகோதரி | 25% |
| (iv) | சொத்துக்கள் முழுமையாக அழிக்கப்பட்டிருந்தால் | 20% |
| (v) | மேலேயுள்ள (i)இல் அல்லது (ii)இல் அல்லது (iii)இல் விதித்துரைக்கப்பட்டு உள்ள எந்த நபருக்கும் நிரந்தரமாக முழுமையான ஏலாமை ஏற்பட்டிருந்தால் | 25% |
| (vi) | மேலேயுள்ள (i)இல் அல்லது (ii)இல் அல்லது (iii)இல் விதித்துரைக்கப்பட்டு உள்ள எந்த நபருக்கும் நிரந்தரமாக | ஏலாமையின்/சம்பாதிக்கும் திறன் இழப்பின் நூற்றுவீத அடிப்படையில் 25 சதவீதத் |

குறிப்பு - (அ) கணக்கிடப்படவுள்ள புள்ளிகளின் சலுகை நூற்று வீதங்களின் அடிப்படை பரீட்சையில் வேட்பாளரினால் பெறப்பட்ட புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையாகும்.

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட நிபந்தனைகள் செயற்படுமிடத்தில் வேட்பாளருக்கு கூடுதலான நன்மையளிக்கும் ஆகக் கூடுதலான புள்ளிகள் மட்டுமே வழங்கப்படல் வேண்டும்.

(இ) குடும்பத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர் கொல்லப்பட்டிருந்தால் 10 மேலதிக புள்ளிகள் வேட்பாளருக்கு வழங்கப்படல் வேண்டும்.

(ஈ) இச்சலுகை அத்தகைய பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்திலுள்ள ஒரு குடும்ப உறுப்பினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) மேலேயுள்ள (1)இன் கீழ் அல்லது (11)இன் கீழ்வரும் பாதிக்கப்பட்டவர் அத்தகைய எந்த உபாயத்தையும் அப்பிரதேசத்தின் பிரதேச சுகாதாரச் சேவைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் காயத்தை வகைப்படுத்துவதற்கும் ஏலாமையை/சம்பாதிக்கும் திறன் இழப்பை நிர்ணயிப்பதற்கும் மருத்துவ சபையொன்றை நியமிப்பார்.

(ஊ) பாதிக்கப்பட்டவர் இந்த விடயத்தை பொலிசாருக்கும் பிரதேசத்தின் பகுதிச் செயலாளருக்கும் மேலதிக அரசாங்க அதிபருக்கும் அறிவித்தல் வேண்டும், அவர்கள் பாதிக்கப்பட்டவர் பயங்கரவாத நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ளாரா வென்பதைத் தீர்மானிப்பதற்காக இச்சம்பவம் பற்றி ஆய்வு செய்வர்.

03. இச்சலுகைகளை நாடுகின்ற விண்ணப்பகாரர் ஒருவர் சாதாரண விண்ணப்பகாரர் ஒருவருக்கான உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளதைப் போன்ற பிற சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04. இச்சலுகை பதவியுயர்வுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளுக்கும் ஏற்புடைத்தானதன்று.

05. இச்சுற்றறிக்கையின் நோக்கத்திற்காக 'குடும்ப உறுப்பினர்' என்ற பதம் பாதிக்கப்பட்டவர் திருமணம் முடித்தவராகவிருக்குமிடத்து வாழ்க்கைத் துணையும், பிள்ளை திருமணம் முடித்திருந்தாலும் அல்லது திருமணம் முடிக்காமலிருந்தாலும் அல்லது தொழில் புரிந்து கொண்டிருந்தாலும் அல்லது தொழில் புரியாமலிருந்தாலும் அல்லது இரண்டையும் செய்து கொண்டிருந்தாலும் அதைக் கவனியாமல் பிள்ளைகளும் எனப் பொருள்படும். அத்துடன் பாதிக்கப்பட்டவர் பிரம்மச்சாரியாக அல்லது கன்னிப் பெண்ணாக இருக்குமிடத்து தந்தையுடன் அல்லது தாயுடன் கூடுதலாக, சகோதரர்களும், சகோதரிகளும் திருமணம் முடித்தவர்களாகவும் அல்லது திருமணம் முடிக்காதவர்களாகவும் தொழில் புரிபவர்களாகவும் அல்லது தொழில் புரியாதவர்களாகவும் அல்லது இரண்டையும் செய்தவர்களாகவும் இருப்பதைக் கவனியாமல் சகோதரர்களும் சகோதரிகளும் எனப் பொருள்படும்.

06. அத்தகைய விடயம் ஒவ்வொன்றினதும் பதிவுகளை மேலதிக அரசாங்கஅதிபர்கள்/பகுதிச் செயலாளர்கள் (உ.அ.அ.) தயாரித்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உபயோகிப்பதன் பொருட்டு அவற்றை நாளது வரையானவைகளாக்கி அப்பதிவுகளின் பிரதிகளை இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கும் கொள்கை திட்டமிடல், செயற்படுத்தல் அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புதல் வேண்டும். அவர் கோரிக்கை செய்யப்படுவதன் பேரில் பிற எந்த நியமிப்பு அதிகாரிக்கும் அத்தகைய தகவல்களை வழங்குதல் வேண்டும்.

07. நியமனத்திற்குத் தெரிவு செய்யுமுன் நியமிப்பு அதிகாரி விணைப்பகாரர் தகுதியுடைய வேட்பாளராவென்பதையும் இத்திட்டத்தின் கீழ் குடும்ப உறுப்பினரொருவருக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளனவாவென்பதையும் உதவி அரசாங்க அதிபருடன் சரி பார்த்தல் வேண்டும். குடும்ப உறுப்பினர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்குமிடத்து அத்தகைய உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் சலுகை நன்மையைப் பெற வேண்டியவர் யாரென்பதைத் தங்களுக்குள் தீர்மானித்து அந்த உடன்படிக்கையில் உதவி அரசாங்க அதிபர் முன்னிலையில் தங்களுடைய ஒப்பங்களை இடுதல் வேண்டும். நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர், பயங்கரவாதத்தினல் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிரலிலிருந்து அக்குடும்பத்தை நீக்குவதை இயலச் செய்வதன் பொருட்டு, அது பற்றி உதவி அரசாங்க அதிபருக்கும் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கும் கொள்கை திட்டமிடல், செயற்படுத்தல் அமைச்சின் செயலாளருக்கும் நியமிப்பு அதிகாரியினல் அறிவிக்கப்படல் வேண்டும். இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென நியமிப்பு அதிகாரியினல் ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

08. இத்திட்டத்தின் கீழ் செய்யப்படும் நியமனங்கள் அத்தகைய நன்மை பெறுபவர்களின் உரிய இனத்தொகுப்பின் இனக்கிடைப்புப் பங்கு ஒவ்வொன்றுக்கும் எதிராக சரியான எதிரீடு செய்யப்பட வேண்டும்.

09. இத்திட்டம் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது 90.1.1ஆந் திகதிக்குப் பின்னர் நடத்தப்படும் பரீட்சைகளுக்கு ஏற்புடைத்தானதாகும். அத்துடன் இது 1987 யூலை 1ஆந் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட சகல பயங்கரவாதச் சம்பவங்களையும் உள்ளடக்கும்.

ஒப்பம்: எம்.என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.